Registered as a News paper in Ceylon விலை சதம் 10

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
THE EELA NADU
தேசிய தினசரி
National Tamil Daily
மலர் 9 [12-8-67] இதழ் 182
யாழ்ப்பாணம் பிலவங்க ஆடி 27 ஜ. அவ். 5 சனிக்கிழமை

மில்க் வைற்
நீல சோப்
10 சதம் கட்டி
வாங்கி
அதிகலாபம் அடையுங்கள்

# "சிறந்த பஸ் சேவைக்கு 3-மாதம் காத்திருங்கள்"

## யாழ்ப்பாண மக்களுக்கு இ. போ. ச. அதிபர் ஆறுதல்

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில், பஸ் சேவை வர வர மோசமடைந்து வருவதாகவும் பிரயாணிகள் சந்திக்குச்சந்தி மணிக்கணக்கில் காத்துநிற்க வேண்டியிருப்பதாகவும் நேற்று சாவகச்சேரிக்கு விஜயம் செய்த இலங்கை போக்குவரத்து சபை அதிபர், திரு. ஆர். ரி. டி. சில்வாவிடம் பிரயாணிகள்சங்க பிரதிநிதிகள் புகார் செய்தனர்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தென்மராட்சியிலுள்ள பஸ் பிரயாணிகள் சங்க பிரதிநிதிகளும் இலங்கைப் போக்குவரத்து சபை ஊழியரும் கலந்து கொண்டனர்.

திரு. எஸ். வி. அரியநாயகம் பேசும்போது கோண்டாவிலிலுள்ள யாழ்ப்பாணம் மத்திய பஸ் டிப்போவுக்கு டெலிபோன் தொடர்பு இல்லாததால் பல கஷ்டங்கள் ஏற்படுவதாகவும், நேர அட்டவணையின்படி பஸ்கள் சேவையிலீடுபடுவதில்லையென்றும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் பஸ் சேவை படுமே சமாகஇருப்பதாகவும், அடிக்கடி பஸ்கள் வழிகளில் பழுதடைந்ததால், பிரயாணிகள் பல தொல்லைக்குள்ளாகிறார்களென்றும், அதிகாரிக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

அதிபர் திரு. ஆர். டி. சில்வா பேசும்போது கூறியதாவது! யாழ்ப்பாணத்தில் இப்படியானதொரு பிரயாணிகள் சங்கக்கூட்டத்தில் எனக்கு அளிக்கப்படும் வரவேற்பையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். வேறு இடங்களில், இப்படியான கூட்டங்களில் பொறுமையிழந்த பிரயாணிகளால் கல்லெறி கூடவிழுவதுண்டு.

இப்பகுதியில் உள்ள வீதிகள் பழுதடைந்துள்ள காரணத்தினால்தான் பஸ்கள் விரைவில்பழுதடைகின்றன. இந்த நிலையில் புதிய பஸ் சேவைகளை ஆரம்பிப்பது ஆலோசனைக்குரிய விஷயம் பருத்தித்துறை டிப்போவிற்கு 18 பஸ்கள் அனுப்பப்படவிருக்கின்றன. யாழ்ப்பாணத்திற்கும் மேலதிக பஸ்கள் அனுப்பப்படும்.

இன்னும் 3 மாத காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு சிறந்த பஸ்சேவையளிக்கப்படும். இந்த 3 மாதகாலத்தில் கோண்டாவில் மத்திய டிப்போவின் குறை வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுவிடும்.

சாவகச்சேரி காரியாதிகாரி திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை, பிராந்திய முகாமையாளர் திரு. வேலுப்பிள்ளை, திருவாளர்கள் எஸ். கே. திரவியநாயகம், வி. வேலும்மயிலும் ஆகியோரும் பேசினார்கள்.

## இராணுவத் தளபதி இங்கு வந்தார்

### உப உணவுப் பொருள் பதுக்கலை தடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், சனி

இலங்கை இராணுவத் தளபதி திரு. எச். ஈ. ஹெறயின் நேற்றுக் காலை உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

உப உணவுப் பொருட்களினதும், பால் மாவுகளினதும் பதுக்கலை வடபகுதியில் தடுப்பது சம்பந்தமாக அண்மையில் பிரதமர் வடபகுதி பொலிஸ், இராணுவ அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை சமபந்தமாக மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டே இவர் இங்கு விஜயம் செய்தார். இம்மாதம் 1-ந் திகதி முதல் இராணுவத்தினர் உதவியுடன் பொலிசார் ஆனையிறவில் நிரந்தர பரிசோதனை முகாம் ஒன்று அமைத்துள்ளனர்.

நேற்றுக் காலை இங்கு விஜயம் செய்த திரு. ஹெறயின், வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், வடபகுதி கள்ளக்குடியேற்றத் தடுப்புப் பகுதி சுப்பிரிண்டன் திரு. லயனல் சேனநாயக்கா, வடபகுதி இராணுவ அதிகாரி திரு. மொரிஸ் ஜெயவீரா ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் நேற்று மாலை ஆனையிறவு பரிசோதனை முகாமுக்கு விஜயம் செய்து அதனைப் பார்வையிட்டார். [ந. நி.]

## ஆலய நிர்வாகிகள் மீது வழக்குத் தொடர முடிவு

### கலகத்தை தூண்டுவோர் மீதும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், சனி

அச்சுவேலி உலவிக்குளப் பிள்ளையார் கோவிலில் பிரவேசிக்க முனைந்த சிறுபான்மைச் சமூகத்தினரைத் தடுத்துநிறுத்தியது சம்பந்தமாக அவர்கள் பொலிஸில் செய்த புகாரைத்தொடர்ந்து சம்பந்தப்பட்ட ஆலய நிர்வாகிகள் மீது பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிகின்றது. இவர்களுக்கு எதிரான வழக்கு இம்மாதம் 31-ம் திகதி தாக்கல் செய்யப்படும் என அறியப்படுகிறது.

ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக நேற்றுக்காலை யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற உயர் தர அதிகாரிகளின் மகாநாட்டிலேயே இம்முடிவு திர்மானிக்கப்பட்டது. வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம், யாழ்ப்பாண மாவட்ட தலைமைக் காரியாலயக் காரியாதிகாரி திரு. ஏ. கந்தையா ஆகியோர் இம்மகாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

இதனைத்தொடர்ந்துநடைபெற்ற சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதிகளைக்கொண்ட மகாநாட்டிலேயே மேற்கண்ட முடிவு தெரிவிக்கப்பட்டது. சிறுபான்மைச் சமூகத்தினர் சார்பில் வழக்கறிஞர் திரு. தர்மலிங்கம், முன்னாள் செனட்டர் திரு. ஜி. நல்லையா, திரு. எம். சி. சுப்பிரமணியம் ஆகியோர் உட்பட இன்னும் பலர் அங்கு சமூகம் கொடுத்திருந்தனர்.

சிலதினங்களாக பூட்டப்பட்டிருந்த அச்சுவேலி உலவிக்குளப் பிள்ளையார் கோவில் மீண்டும் திறக்கப்பட்டு அங்கு இப்போது வருடாந்தஉற்சவம் நடைபெறுவதாகவும், 6-ம் நாள் உற்சவத்தை வருடா வருடம் சிறுபான்மைச் சமூகத்தினரே நடத்திவந்தபோதும், இவ்வருடம் இத்திருவிழாவைச் சிறுபான்மைச் சமூகத்தினருக்குவழங்க மேற்படி ஆலய நிர்வாகிகள் மறுப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்துவழமைபோல் இத்திருவிழாவை சிறுபான்மைச் சமூகத்தினர் செய்ய அனுமதிக்குமாறு மேற்படி கோவில் நிர்வாகிகளை காரியாதிகாரி மூலம் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆலயப் பிரவேசத்தின் போது கோவில் நிர்வாகிகள் யாரையாவது தடுத்துநிறுத்தினால் சம்பந்தப்பட்ட மக்கள் பொலிஸில்புகார்செய்த பின்னர் வேண்டிய நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்வார்களென்றும், பலாத்காரமாக ஆலயப்பிரவேசம் செய்து கலகத்தை உண்டு பண்ணுபவர்கள் மீதும் பொலிஸார் சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயங்கமாட்டார்களென்றும், இம்மகாநாட்டின் பின்னர் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம்தெரிவித்தார். [ந. நி.]

## "தமிழிலும் பரீட்சை எடுக்க வசதி செய்க"

### உயர் கல்விச் சபையிடம் உடுப்பிட்டி எம. பி. வேண்டுகோள்

கொட்டாஞ்சேனை, வெள்.

அக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும்கனிஷ்ட பல்கலைக்கழகத்தில், எல்லாப்பாடங்களும் தமிழிலும் போதிக்க வசதி செய்யும்படி உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கல்வி மந்திரிக்கும், தேசிய உயர் கல்விச்சபைத் தலைவருக்கும் எழுதியுள்ள கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார்.

கனிஷ்ட பல்கலைக்கழகங்களில் சில பாடங்கள் சிங்களத்தில் மட்டுமே நடாத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் தமிழ் மாணவர்கள் அப்பாடங்களைப் படிக்கமுடியாத நிலைமைக்குள்ளானார்கள்.

இவ்விஷயம் தமிழ் மாணவர்களால் உடுப்பிட்டி எம். பி. யின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, அவர் கல்வி மந்திரிக்கு கடிதம் எழுதியுள்ளார். ——

## நல்லூர் திருவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் இரண்டாம் நாள் உற்சவமான இன்றைய நிகழ்ச்சிகள்: பகல் உற்சவ வசந்த மண்டபப் பூஜை 10-30 மணிக்கு நடைபெறும். அதன் பின்னர் மயில், அன்ன வாகனங்களில் சுவாமிவீதிஉலா வரும்.

இரவு உற்சவம் 8 மணிக்கு நடைபெறும். பின்னர் வெள்ளிமயில் அன்னவாகனங்களில் சுவாமிவெளி வீதி உலா வரும்.

இரவு 9 மணிமுதல் நல்லூர் ஸ்ரீமுருகன் தண்ணீர்ப் பந்தலில் ஸ்வாமி நாதத் தம்பிரான் சுவாமிகளால் நடாத்தப்படும் 'கந்தன் கருணை' தொடர் கதாப் பிரசங்கத்தில் 'தக்கயக்ஞம்' என்னும்பொருள் பற்றிய விரிவுரை நடைபெறும். [ந. நி]

## மாவட்ட ரீதியில் தையல் ஆசிரியர்

கொட்டாஞ்சேனை, வெள்ளி

மாவட்டரீதியாக தையல ஆசிரியர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர். இதற்கான விண்ணப்பத்தை தேசிய சிறு கைத்தொழில் இலாகா கோரியுள்ளது. இதனைத் தொடர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் தையல பாடசாலைகளின் தொகை அதிகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாசகம்**

நம்மை எவ்விதம் ஆக்க தெய்வம் விரும்புகிறதோ, அவ்விதமே செய்ய நாம் விட்டுவிட வேண்டும். ஆனால்... நாமோ நாம் விரும்பும்படி தெய்வம் செய்ய வேண்டும் என ஆசைப்படுகிறோம். இதுதான் தவறு. தெய்வத்திற்கு நிபந்தனை போடுவது பூரண சரணாகதியாகாது.

— சுவாமிராமதாஸ்

ஈழநாடு
Ceylon's National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

சாலிவாகன பிலவங்க ஆடி 27 (12-8-67)

## தமிழ் நாட்டில் துயரச் செய்தி

தமிழ்நாட்டிலிருந்து கிடைத்துவரும் ஒரு செய்தி அதிர்ச்சியும் வேதனையுமளிப்பதாக இருக்கிறது.

சென்னை நகரையும் செங்கல்பட்டு மாவட்டத்தையும் சேர்ந்த பலர் ஒரு விழாவில் கலந்து கொண்டதாகவும் அவர்கள் போதையூட்டக்கூடிய 'பிரெஞ்சு பொலிஷ், வார்ணிஷ்' ஆகியவைகள் கலந்த ஒருவித செயற்கை மதுபானத்தை அருந்தியதாகவும் இதன் விளைவாக சுமார் ஐநூறுபேர் ஆஸ்பத்திரிகளில அனுமதிக்கப்பட்டதாகவும் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டவர்களும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படாதவர்களுமாக இதுவரை 102 பேர் மாண்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருபவர்கள் உயிர் பிழைத்தாலும்கூட கண்பார்வை இழந்துவிடக் கூடுமென்றும் அஞ்சப்படுகிறது.

இந்தியாவில் மதுவிலக்குச்சட்டம் முதன்முதலில் அமுலுக்குக்கொண்டு வரப்பட்ட ராஜ்யங்களில் தமிழ்நாடு முதலாவது ராஜ்யமாகும். மதுவிலக்கு அமுலுக்குக்கொண்டு வரப்பட்டதால் பலகுடும்பங்கள் மகிழ்ச்சியுடன் வாழும் நிலை ஏற்பட்டது. ஆயினும் சட்டவிரோதமான முறையில் மதுபானம் தயாரிப்பவர்களும் சட்டவிரோதமாக மதுபானம் பாவிப்பவர்களும தமிழ்நாட்டில் இல்லாமல் போகவில்லை. இலங்கையில் மதுவிலக்குச்சட்டம் கொண்டுவராதபோதிலும்கூட சட்டவிரோதமாக மதுபானம் தயாரிப்பதும் 'கசிப்பு' என்ற பெயரில் அது விற்பனை செய்யப்படுவதும் இன்னும் பெரிய பிரச்னையாக இருக்கிறது. 'கசிப்பில்' பலவகையுண்டு. இந்தக் கசிப்பு அருந்தி சிலர் மாண்ட சம்பவங்களுமுண்டு. இலங்கையிலேயே சட்டவிரோதமாக மதுபானம் உற்பத்தி செய்யப்படுகிறதென்றால் மதுவிலக்குச் சட்டம் அமுலிலுள்ள தமிழ்நாட்டில் சட்டவிரோத மதுபானம் தயாரிக்கப்படுமென்பதற்கும் அதை அங்கு விற்றுப் பிழைக்க முடியுமென்பதற்கும் சந்தேகமில்லை. தமிழ்நாட்டில் வசதி படைத்தவர்கள் பலர் உயர்ந்த மதுபானவகைகளை 'அனுமதி' பெற்றும் அனுமதிபெறாமலும் கூட உபயோகிக்கின்றனர் என்பதும் உண்மை. வசதியற்ற, மதுபானத்திற்கு அடிமைப்பட்ட எளிய மக்கள் 'மலிவான சரக்கு' தேடுகின்றனர். இதன் விளைவுதான் சென்ற சில தினங்களுக்குள் நூற்றுக்கு மேற்பட்ட எளிய மக்கள் மாண்டுபோன துயரச்செய்தி.

வசதி படைத்தவர்கள் அனுமதி பெற்றும் அனுமதி பெறாமலும் 'உயர்ந்த ரக' சரக்கைப்பாவிப்பதாலும் வசதியற்றோர் உயிருக்கு ஆபத்தேற்படுத்தக்கூடிய மலிவான 'சரக்கு'களை சட்டவிரோதமாக உபயோகிப்பதாலும் மதுவிலக்கை தமிழ்நாட்டில் ரத்துச் செய்துவிட வேண்டுமென்று கூறுவது சரியல்ல. இதுபோன்ற யோசனையைச் சிலர் தெரிவித்துள்ளனர். இலங்கையில் மதுவிலக்குச்சட்டம் இல்லை. ஆயினும் 'கசிப்பு' இல்லாமலில்லையே.

வார்ணிஷ், பிரெஞ்சு பொலிஸ் போன்ற பொருள்களின் விற்பனையைக் கட்டுப்படுத்தலாம். ஆயினும் எந்தப் பொருள்களில போதை இருக்கிறதெனக் கண்டுபிடித்து அதை உபயோகித்து மதுபானம் தயாரிப்பவர்களுக்காக எல்லாப் பொருள்கள்மீதும் கட்டுப்பாடும், விற்பனைத் தடையும் விதிப்பதும் சுலபமல்ல என்பதும் உண்மையே

மதுவிலக்குச் சட்டத்தைச் சீராக, தீவிரமாக அமுல் நடத்துவதன் மூலமும், பொது மக்களின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் சட்டவிரோத மதுபான உற்பத்தியையும் விற்பனையையும் தடைசெய்வதன் மூலமும் எளிய மக்களின் உயிரையும் உடமையையும், வாழ்வையும் பாதுகாக்க முடியும்.

தமிழ்நாட்டில் மதுவிலக்குத் தோல்வியடைந்துவிட்டதாகக் கருதி, மதுவிலக்குச் சட்டத்தை ரத்துச் செய்தால் அது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல உலகில் வேறு எந்த நாட்டிலுமே இனி மதுவிலக்குக் கொண்டு வருவதற்கு வாய்ப்பே இருக்காது போய்விடலாம் என்று அஞ்சுவதற்கு இடமுண்டு.

இன்று சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

# நாவலூர் நம்பியின் நல்லுபதேசம்

— ஆர். பி. ஹரன் கோப்பாய் —

இவ்வுலகிலே தோன்றிய ஆன்மாக்கள் யாவும்பேரின்பப்பெரும் பேறடைய விரும்புவது இயற்கை. அதற்கு சமயக்குரவர்கள் நால்வரும் நால்வகை மார்க்கங்களை எடுத்துக் காட்டியுள்ளனர் ஞானசம்பந்தப்பெருமான் சற்புத்திரமார்க்கத்தினையும், அப்பரடிகள் தாசமார்க்கத்தினையும் மாணிக்கவாசகஸ்வாமிகள் சன்மார்க்கத்தையும், சுந்தரமூர்த்திகள் சகமார்க்கத்தையும் இறையடியடைய பற்றுக்கோடாகக்கொண்டனர்.

மேற்கூறப்பட்ட நால்வகை மார்க்கங்களிலே இறைவனைத்தமது தோழனாகக்கொண்டு, தன்பக்தி வலையினுள் சிக்கவைத்து, ஏவலாளராகப் பணித்து தொண்டு செய்வித்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

சுவாமிகளது வரலாற்றிலேலே, அவரது செந்தமிழ் பொலிந்த சந்தப்பாக்களிலே அவர் தம்தேவாரத் திருப்பதிகங்களிலே, வாழ்க்கைக்கேற்ற பல நல்லுபதேசங்களையும் திருவைந்தெழுத்தின் மகிமையையும், இறையின் தன்மையையும் பிறவியின் பயனையும் மிகச்சிறந்த முறையில் காணக்கூடியதாகவுள்ளன.

அவைகளிலே திருவைந்தெழுத்தை நாம் இடைவிடாது இறைவன் பாதத்திலே பற்றுவைத்து ஓதினால் பிறவிப்பெருங்கடலை நீந்தலாம் எனத் தம் அனுபவ வாயிலாக அறுதியிட்டுக் கூறுகின்றார். இதனைப் பின்வரும் பாடல் கூறுகின்றது.

''மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித் தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிற
வாத தன்மை வந்தெய் தினேன்
கற்றவர் தொழுது ஏத்தும் சீர்க்கறை
யூரிற் பாண்டிக்கொடு முடி
நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சி வாயவே''

அதுமாத்திரமன்றி நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும சிவன் சேவடியை சிந்திக்க மரணத் தருணத்திலுங்கூட நான் மறக்கினும் நாவானது அவனது திருவைந்தெழுத்தை இடையின்றி கூறும் தன்மை பெற்றது என உலகுய்ய வழி காட்டி உபதேசம் செய்கின்றார், சுவாமிகள்.

''ஓவுநாள் உணர்வு அழியு நாள் உயிர்
போகுநாள் உயர் பாடை மேல்
காவு நாள் இவை என்ற லால் கரு
தேன் கிளர் புனற் காவிரிப்
பாவு தண் புனல் வந்திழி பரஞ்
சோதி பாண்டிக் கொடு முடி
நாவலா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சி வாயவே''

இறைவன் நாம் குற்றம் செய்யினும் அவற்றையெல்லாம் குணமெனக்கொண்டு நல்லருள் செய்பவன். ஒரு ஆடானது பாலெடுக்கும் சமயத்திலே அப்பாலினுள்ளே பிழுக்கையை சிந்திவிட்டால் உலகோர் அதனை வாரிவெளியே வீசிவிட்டு பாலை உபயோகிப்பது போல இறைவனும் அவனது சரணத்தை நாம் மறக்காதவிடத்து நம்மிடமுள்ள குற்றங்களைநீக்கி குணத்தையேற்று கருணை புரிவான் என்னும் சிறந்த உபதேசத்தைக் கீழ்வரும பாடல் மூலம் கூறுகின்றார் சுந்தரமூர்த்திசுவாமிகள்.

''அழுக்குமெய் கொடுன் திருவடியடைந்தேன்
அதுவும் நான் படப் பாலதொன்றானால்
பிழுக்கை வாரியும் பால் கொள்வர் அடிகேள்
பிழைப் பனாகிலும் திரு வடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப் பெயர் அல்லால் மாற்று
நான் அறியேன் மறு மாற்றம்
ஒழுக்க என் கணுக்கு ஒரு மருந்துரையாய்
ஒற்றியூரெனும் ஊருறைவானே''

ஆகவே நாவலூர் நம்பியின் இத்தகைய பல நல்லுபதேசங்களை தேவாரப் பதிகங்களை அன்புடன் வாசித்து பூசித்து நேசித்து அவர் காட்டிய பாதையிலே சென்றுபிறவிப்பெருங்கடல் நீந்திபேரின்பப் பெருவாழ் வடைவோமாக.

## சுந்தரர் குருபூசைகள்

தெல்லிப்பழை, சனி

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் இன்று சுந்தரமூர்த்திநாயனார் குருபூசையும் பெரியபுராண பூர்த்திவிழாவும் நடைபெறவிருக்கிறது. பெரியபுராணப் பூர்த்திவிழா ஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் தலைமையில் நடைபெறும்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், சனி

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று சுந்தரமூர்த்திசுவாமிகள் குருபூசை நடைபெறும். காலையில் திருமுறைஓதுதல், விசேட ஆராதனைகள், சொற்பொழிவுகள் ஆகியன நடைபெறும். [ந. நி.]

## 'தமிழ் இல்லை'

### எஸ். ஜே. வி. கடிதம

கொட்டாஞ்சேனை, வெள்ளி

பல அரசாங்க ஸ்தாபனங்கள், கூட்டுத்தாபனம் மற்றும் போக்குவரத்து பஸ்கள் போன்றவற்றில் தமிழில் பெயர்ப்பலகைகள் இல்லை என்பதை சுட்டிக்காட்டி தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரத மந்திரிக்கும், தேசிய சேவைகள் மந்திரிக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

பல பெயர்ப்பலகைகளில் தமிழ் வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுவதாகவும் நியாயமான தமிழ் விதிக்கு இது முரணானது என்றும் ஆகவே இதனைஇட்டு உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் தமது கடிதத்தில் அவர்கேட்டுள்ளார்.

## பிரயாணிகள் சம்மேளன அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம், சனி

தரமான வடஇலங்கைப் பொதுப் போக்குவரத்து பிரயாணிகள் சம்மேளனம் ஒன்றை உருவாக்குவதற்கு பிரயாணிகள் நலனில் அக்கறை உள்ள சங்கங்களையும் தனிப்பட்டவர்களையும் அதில் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளும்படி யாழ்ப்பாணம்சமூகசேவைப் பகுதியைச்சேர்ந்த அமைப்பாளரான திரு. ரி. வேலுப்பிள்ளை பொதுமக்களுக்கும் சங்கங்களுக்கும் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். [ந நி]

## இன்றைய பலன்

12-8-67
சனிக்கிழமை
[ஆடிமாதம்27-ந்திகதி]

நட்சத்திரம் - சுவாதி இரவு 7-28வரை — மேல் விசாகம்
திதி-சப்தமிமாலை 6-32 வரை—மேல் அட்டமி
சுபநேரம் -3-04-4-34
ராகுகாலம்9-04-10-34

மேடம்- பிணி பல நீங்கும்
ரிஷபம் - புதுமுனைத் தாகுல்
மிதுனம்- விருந்துண்ணல்
கடகம்- எதிர்ப்பு மிகுதி
சிங்கம்- வியாபார விருத்தி
கன்னி- இதயச்சுமை
துலாம்- உடல்நலன் பாதிக்கும்
விருச்சிகம்- சன்மானம் கிடைக்கும்
தனுசு-ஆசாரக்குறைவு
மகரம் - நம்பிக்கை நலன் தரும்
கும்பம்- தருமத்தில் நாட்டம்
மீனம்- அமைதிக்கு ...

## நாட்டிலும் நகரிலும்

வாணிஷ் பூச்சும் பிரெஞ்சு பொலிஷும் கதிரை மேஜைகளை துலக்குவதற்கு மட்டும் தான் உபயோகமாகின்றன என்று இதுகாறும் எண்ணியிருந்தேன். ஆனால் அவை வேறு தேவைகளுக்கும் பாவிக்கப்படுகின்றன என்று மிகுந்த துக்கத்துடன் இப்பொழுது தெரியவருகிறது.

'மனிதன் ஒரு சத்துராதியை, வாய்க்குள் செலுத்தி தன்னுடைய அறிவை வெளியேற்றுகிறான்' என்று ஓர் ஆங்கில மேதை கூறியிருக்கிறார். அவர் குறிப்பிடும் சத்துராதி யார் என்று உங்களில் பலருக்கு தெரிந்திருக்கும்.

இன்று இந்தவாக்கியத்தை மாற்றி 'மனிதன் ஓர் எமனை வாய்க்குள் செலுத்தி தன் உயிரை வெளியேற்றுகிறான்' என்று கூறலாம் போலத் தெரிகிறது.

தமிழ்நாட்டில் மதுவிலக்கு இருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதைப் பயன்படுத்திக்கொண்டு அங்குள்ள சில விஷமிகள் போதை கொடுக்கும் பல விதமான கஷாயங்களைத் தயாரித்து களவாக வழங்கி வந்திருக்கிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு நான் சென்னைக்கு போய் இருந்தபோது அங்கே சில கடைகளில் 'எஸென்ஸ் ஒவ் வனில்லா', 'எஸென்ஸ் ஒவ் ஒரேஞ்ச்' என்ற பெயருடன் சிறு போத்தல்களில் ஒரு திராவகம் விற்பனைக்குவைக்கப்பட்டிருந்ததைக் கண்டேன்.

இதில் வேடிக்கை என்னவென்றால் அந்த போத்தல் லேபல்களில் '60 வீதம் அல்கொஹோல் உள்ளது' என்று முத்திரையிடப்பட்டிருந்தது. மதுவிலுள்ள போதைதரும் வஸ்து இந்த 'அல்கொஹோல்' தான்.

மதுவிலக்கு அமுலில் இருந்தும் இந்த 'எஸென்ஸ்' போத்தல்கள் பகிரங்கமாக விற்கப்படுவதைப் பார்க்க எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது.

'எஸென்ஸ்' போத்தல்கள் இப்பொழுது மறைந்துவிட்டனபோலும், இல்லாவிட்டால் போதை உண்டாக்குவதற்கு வாணிஷ், பிரெஞ்சு பொலிஷ் உபயோகிக்கப்படுமா?

தமிழ்நாட்டில் இதுவரை இந்த கொடிய விஷத்தை உண்டு மடிந்தவர்களின் தொகை 120. நானூறுக்கு மேற்பட்டவர்கள் ஆஸ்பத்திரிகளில் கிடக்கிறார்கள். இவர்களில் சிலர் உயிர் தப்பிப் பிழைத்தாலும் அவர்களுடைய கண் பார்வை கெட்டுவிடும் என்று டக்டர்கள் கூறுகிறார்கள்.

தமிழகத்தில் சிலர் மண்ணெண்ணை, ஸ்பிறிட், மெதில் அல்கொஹோல் முதலிய திராவகங்களையும் மது போதைக்காக அருந்துகிறார்களாம்.

எமது இலங்கை மட்டும் ஏதோ திறம்என்று நினைத்துவிடவேண்டாம். இங்கும் மனிதனுடைய உயிரை அணு அணுவாக உறிஞ்சும் கசிப்பு வடிகள் நாடு முழுவதிலும் தயாரிக்சப்படுகின்றன. ஜனங்களின் சக்தியைக் கொல்லும் இந்த விஷ வடிகள் எப்பொழுதுதான் அற்றுப்போகுமோ!

— வழிப்போக்கன்

## விழா ஒத்திவைப்பு

உரும்பராய், வெள்ளி

இன்று நடைபெறவிருந்த உரும்பராய் இந்துக் கல்லூரி வருடாந்த பரிசளிப்புவிழா எதிர்பாராதவிதமாக அடுத்த மாதத்திற்கு ஒத்திபோடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சென்னையில்

# 102 பேரை வார்ணிஷ் பலி யெடுத்தது; பலர் ஆஸ்பத்திரியில் அவதி

## ராஜ்யம் முழுவதும் வார்ணிஷுக்கு தடை

### கடைக்காரர் கைது

சென்னை, ஆக. 11

**சென்னையில் வார்ணிஷ் குடித்து மரணமானவர்களின் தொகை 102 ஆக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

மது அருந்தும் ஆசையால் வார்ணிஷைக் குடித்த இவர்களின் பரிதாப முடிவுபற்றி தமிழக முதல் அமைச்சர் திரு சி.என். அண்ணாதுரை கவலை தெரிவித்துள்ளார். 'இது மிகவும் பரிதாபமான கொடுமையான நிகழ்ச்சி' என்று அவர் தெரிவித்துள்ளார்.

மதுவுக்குப் பதிலாக வார்ணிஷைக் குடித்த இச்சோக சம்பவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதனைக் குடித்தவர்களில் பலர் தமது இல்லத்திலேயே மரணமானார்கள். மற்றவர்கள் ஆஸ்பத்திரியில் மரணமானார்கள். சில வீடுகளில் கணவன், மனைவி, பிள்ளைகள் எல்லோருமே வார்ணிஷ் குடித்ததால் மரணமாகியுள்ளனர்.

வார்ணிஷ் குடித்ததால் பாதிக்கப்பட்ட 223 பேர் காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர். வாலாஜாபாத் ஆஸ்பத்திரியிலும் வார்ணிஷ் குடித்து ஆபத்தான நிலையிலிருப்பவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அரசாங்க சேவையிலுள்ள டாக்டர்கள் அனைவரும் வார்ணிஷ் நோயாளிகளைக் கவனிப்பதில் இப்போது ஈடுபட்டிருக்கிறார்கள்.

**கடைக்காரர் கைது**

இந்த வார்ணிஷைத் தயாரித்து விற்கும் கடைக்காரர் இருவர் இப்போது கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் விஷச்சத்துள்ள பொருள் ஏதாவது கலக்கப்பட்டிருக்குமா என்பது பற்றிய விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இதற்கிடையே ராஜ்யத்தில் வார்ணிஷ் விற்பனைக்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளது. மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. சென்னை ராஜ்யம் முழுவதும் வார்ணிஷ்போன்ற ஸ்பிரிட் சம்பந்தப்பட்ட பொருள்களை உடனே கைப்பற்ற தமிழக முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

---

## 'வல்லரசுகள் சம்பந்தப்படாத சுதந்திர முன்னேற்றம்'

### இதுவே எமது நோக்கம் என்கிறார் பிரஞ்சு அதிபர்

பாரிஸ், ஆகஸ்ட் 11

**'இரு பெரும் வல்லரசுகள் சம்பந்தப்படாத அமைதியான சுதந்திரமுன்னேற்றமே பிரான்ஸ் தனது கொள்கையாகக் கடைப்பிடித்துவருகிறது' என பிரெஞ்சு அதிபர் ஜெனரல் டிகோல் பிரெஞ்சு மக்களுக்கு விடுத்துள்ள டெலிவிஷன் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

சமீபத்தில் மொண்ட்றியோலுக்கு சென்றிருந்தபோது பிரெஞ்சு இன மக்கள் மத்தியில் அவர் விடுத்த வேண்டுகோள் மற்றும் சில விஷயங்கள் சம்பந்தமாக நிலவிவரும் கருத்துவேற்றுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்குமுகமாகவே அவர் இந்த செய்தியை வெளியிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இருபது நிமிடம் வரை நீடித்த இந்த டெலிவிஷன் பேச்சில் பிரான்ஸ் அனுசரித்துவரும் வெளிநாட்டுக் கொள்கைபற்றியும் டிகோல் தெரிவித்தார்.

**சீனாவுடன் தொடர்பு**

சுதந்திர சமாதான நோக்கம்கொண்டிருப்பதாலேயே சீனாவுடன் பிரான்ஸ் தொடர்புகொண்டிருக்க விரும்புகிறது எனவும் அவர் எடுத்துக்கூறினார்.

---

## 10,000 செங்காவலர்— தொழிலாளர் மோதல்

### கான்டன் மாகாணத்தில் பலர் மரணம்?

பீகிங், ஆக. 11

தென்சீனாவிலுள்ள கான்டன் மாகாணத்தில் மா—சே—துங் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்குமிடையே சென்ற புதன்கிழமை பலத்த சண்டை நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

10,000 செங்காவலருக்கும் தொழிலாளருக்குமிடையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட இச்சண்டை நேற்றுவரை நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலில் இருநூற்றுக்குமதிகமானோர் மரணமடைந்தோ, காயமடைந்தோ இருக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## 'இஸ்ரேலியர் பிடித்த இடத்தை விடமுடியாது'

### தயான் அறிவிப்பு

டெல் அவிவ், ஆக. 11

1948-ம் ஆண்டு இருந்த எல்லைக்கு தாம் திரும்பிச் செல்லக்கூடாது என இஸ்ரேலியப் பாதுகாப்பு மந்திரி ஜெனரல் தயான் இஸ்ரேலியர்களைக் கேட்டுக்கொண்டார்.

இஸ்ரேலுக்கு நிரந்தரமான எல்லை தேவைப்படவில்லையெனவும், சமாதானத்தை உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதையே இஸ்ரேல் விரும்புவதாகவும் இந்த சமாதானம் உறுதிப்படுத்தப்படும்வரை சமீபத்திய போர் ஆரம்பமாவதற்கு முன்னிருந்த நிலைக்கு, இஸ்ரேலியப்படைகள் செல்லமாட்டாதெனவும் தயான் கூறியுள்ளார்.

அராபிய நாடுகளின் நடவடிக்கைபற்றி யூதர்கள் எச்சரிக்கையாகஇருக்க வேண்டுமெனவும் அவர் வற்புறுத்தினார்.

---

## விமானம்மீது ஜீப் மோதியது

சென்னை, ஆக. 11

சென்னை விமானநிலையத்துள் நின்றுகொண்டிருந்த விமானம் ஒன்றின்மீது ஒரு ஜீப் வண்டி மோதியதால் விமானம் பலத்த சேதத்துக்குள்ளாகியது.

பால்ய குற்றவாளி விடுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் விமானநிலையத்தின் வளவில் நின்றுகொண்டிருந்த ஜீப் வண்டியை யாருக்கும் தெரியாமல் வெளியே கொண்டுசெல்[illegible] போதே இச்சம்பவம் நடைபெற்றது.

---

## டிட்டோ கெய்ரோ சென்றார்

கெய்ரோ, ஆக. 11

யூகோஸ்லேவிய அதிபர் டிட்டோ மேற்கு ஆசிய நிலைமை பற்றி ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவர் நாசருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இன்று இங்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

---

## சிறு சேமிப்புக்கு சினிமா

### எம். ஜி. ஆர். முயற்சி

சென்னை, ஆக. 11

சிறு சேமிப்பு பிரசாரத்தின் பொருட்டு நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் படம் ஒன்றை தயாரித்து வெளியிட இருக்கிறார். சிறு [illegible] எம். ஜி. ஆர். நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். சிறு சேமிப்பு திட்டம் பற்றியதாகவே அவர் எடுக்கப் போகும் படம் இருக்குமாம்.

---

## யாழ்ப்பாணத்தில் மோசடிக்கோஷ்டி

### களனியா அநாதைகளுக்கு நிதி சேர்க்கிறார்களாம்

யாழ்ப்பாணம், சனி

களனியாவிலுள்ள அநாதை விடுதிக்குப் பணம் வசூல் செய்வதாகக் கூறும் மோசடிக் கோஷ்டி ஒன்று யாழ்ப்பாணத்தில் நடமாடுவதாகத் தெரியவருகிறது.

இக் கோஷ்டியிலுள்ளவர்கள் சிங்களவராம். தாம் களனியா வாசிகளென்றும் அங்கு யாரும் கவனிப்பாரற்ற நிலையில் ஒரு அநாதை விடுதி உண்டென்றும் அந்த விடுதியில் உள்ள அநாதைகளின் கஷ்டத்தைக் கண்டு சகிக்கமாட்டாத தாம் அவர்களது துன்பத்தைத் துடைத்து புனர்வாழ்வு அளிக்கும் நோக்கத்தோடு பணம் வசூல்செய்து வருவதாகவும் கூறி, அத்தாட்சிக்கு சில போலி தஸ்தாவேஜிகளைக் காண்பித்து வீடுவீடாகச் சென்று யாழ்ப்பாணப்பொதுமக்களை ஏமாற்றிப் பணம் சேர்த்து வருகிறார்களாம். இம்மோசடிக் கும்பல் வீடுவீடாகச் சென்று பணம் சேர்த்து வருகையில் ஒரு சமூக சேவைப்பகுதி அதிகாரியிடம் வகையாக மாட்டிக் கொண்டனராம். இவ்வதிகாரியின் வீட்டுக்குச் சென்ற இக்கோஷ்டியிடம் பல கேள்விகளை விடுத்த பின்னரே இவர்கள் மோசடிக்காரர் எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து இவ்வதிகாரி விசாரித்ததிலிருந்து களனியாவில் ஒரு அநாதை விடுதி இல்லையென்றும் அப்பகுதிக் காரியாதிகாரியின் அல்லது சமூக சேவைப் பகுதியின் அனுமதி பெற்ற அத்தாட்சிக்கடிதங்களோ அவர்களிடம் இல்லையென்றும் தெரியவந்தது. இதுவிஷயத்தில் பொது மக்கள் எச்சரிக்கையாகஇருக்க வேண்டுமென அவ்வதிகாரி நமது நிருபரிடம் கூறினார்.

[வி-நி.]

---

யாழ். ஆஸ்பத்திரி

## கன்டீன் மூடியதால் பொதுமக்கள் அவதி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் இருந்த கூட்டுறவுச் சிற்றுண்டிச்சாலை கடந்த ஒருவாரகாலமாக மூடப்பட்டிருப்பதால் ஆஸ்பத்திரி நோயாளர்கள் பெரும் திண்டாட்டத்துக்குள்ளாகியிருக்கிறார்கள்.

ஆஸ்பத்திரி நோயாளிகளுக்கான வெந்நீர் மற்றும் அத்தியாவசியமான பொருட்களைவாங்குவதற்கு இப்போது பொதுமக்கள் ஆஸ்பத்திரிகளுக்கு வெளியிலுள்ள கடைகளுக்குச் செல்ல வேண்டியிருப்பதுடன் அங்கு சுடுதண்ணீரை 15, 20 சதம் கொடுத்துப் பெற வேண்டிய நிலையிலிருப்பதாகவும் பலர் புகார் செய்துள்ளனர்.

ஆஸ்பத்திரியிலுள்ள ஊழியர்களால் நடாத்தப்படும் இந்தச் சிற்றுண்டிச் சாலையின் முன்னைய மனேஜர் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்தே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. நோயாளர்களின் நலன் கருதி நிறுவப்பட்ட இந்தச் சிற்றுண்டிச்சாலை மூடப்பட்டதால் வெளியில் பொருட்களை வாங்கச் செல்வோர் திரும்பவும் உள்ளே செல்ல விடாது ஆஸ்பத்திரிக் காவலாளர்களால் தடுக்கப்படும் கஷ்டமும் அங்கு ஏற்பட்டுள்ளதாகப் பலர் ஆஸ்பத்திரி அதிகாரிகளுக்கு முறையிட்டுள்ளனராம்.

[ந.நி.]

---

## 'வேர் இற்றுவிட்டது'

### அண்ணா கூறுகிறார்

திருச்சி, ஆக. 11

''நாட்டில் உள்ள எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்றுபட்டு ஒற்றுமையாகப் பாடுபட்டால் மத்திய அரசிலுள்ள காங்கிரஸ் மந்திரி சபை இன்னும் மூன்று மாதத்திற்கு நிலைத்து நிற்காது. காங்கிரஸ் பெரிய ஆலமரம்போல் வளர்ந்துவிட்டது. என்றாலும் அதன் வேர் இற்றுப் போய்விட்டது''. இவ்வாறு தமிழக முதலமைச்சர் திரு. அண்ணாதுரை தெரிவித்துள்ளார்.

---

## கேரோவுக்கு கேரோ

கோழிக்கோடு, ஆக. 11

கோழிக்கோடு நகரில் தொழிற்சாலையைச் சேர்ந்த குமாஸ்தாக்களை தொழிலாளர்கள் 'கேரோ' செய்தார்கள். இதனால் குமாஸ்தாக்கள் உணவு அருந்த முடியாத நிலையில் இருந்தார்கள் இதனால் தொழிற்சாலை பிரதிநிதிகள் தொழிலாளர்களை கேரோ செய்யத் தொடங்கியதால் இருதரப்பினருக்கும் ஒரு உடன்பாடு ஏற்பட்டு கேரோ நீக்கப்பட்டது.

---

## யார் இந்தச் சிறுவன்?

சாவகச்சேரி, வெள்ளி

சுமார் 8வயது மதிப்பிடக்கூடிய வாய்பேசமுடியாத ஒரு சிறுவன் சாவகச்சேரி களிலுள்ள வீதிகளில் தனிமையாக நடமாடியதை அவதானித்த சாவகச்சேரி பொலிஸார் அச்சிறுவனைச் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன் ஆஜர்செய்தனர். மாஜிஸ்திரேட் அச்சிறுவனை இம்மாதம் 21-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார் இச்சிறுவன் உடுவிலைச்சேர்ந்தவரெனக்கூறப்படுகிறது.

---

## அரிசி 'கியூ'வில் நின்றவர் மரணம்

சென்னை, ஆக. 11

ரேசன் அரிசி வாங்க 'கியூ'வில் நின்ற 70 வயதுடைய நபர் ஒருவர் திடீரென்று மயக்கமுற்றுவிழுந்து மரணமடைந்தார்.

மரண விசாரணையின் போது இவர் இரத்த அமுக்க வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தார் என்று அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகருக்கு நன்னீர்த் திட்டம்

சுழிபுரம், வெள்ளி

பொன்னாலைக் குளத்துக்கு அருகாமையில் புதிய கிணறுகள் வெட்டி, அக்கிணற்று நல்ல நீரை குழாய்கள் மூலம் காரைநகர்ப் பகுதிக்கு விநியோகம் செய்வதற்கான திட்டத்தை அமுல் நடத்துவதற்கான ஆராய்ச்சியில் நீர்ப்பாசன இலாகா நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர். பொன்னாலைக் குளத்திற்கு அருகாமையில் முகாமிட்டிருக்கும் இந் நிபுணர்கள் கோஷ்டி கடந்த சில தினங்களாக நீரின் அளவைக் கண்டுபிடிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது. புதிய கிணறுகள் தோண்டியும், நிலத்தைப் பரிசோதனை செய்யவிருக்கின்றனர். இத்திட்டம் பூரண வெற்றியடையுமானால், காரைநகர் பகுதி மக்கள் தண்ணீர்க் கஷ்டத்திலிருந்து தன்னிறைவு பெற்றவர்களாவார்கள். பொன்னாலைப் பகுதியும் நன்னீர் பெறும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும். இத்திட்டத்தை இளைப்பாறிய நீர்ப்பாசன நிபுணர் திரு. அ. தையல்பாகர் அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருந்தார்.

# கிரிமலையில் சேஷ்டைகள்

## பொலிஸ் சுப்பிரீண்டனுக்கு மக்கள் கடிதம்

காங்கேசன்துறை, வெள்ளி

கீரிமலை நீர் ஊற்றில் குளிக்கச் சென்றவர்கள் அங்கு நிர்வாணமாக நீராடுவதாகவும் மற்றும் சேஷ்டைகள் செய்வதாகவும் காங்கேசன்துறைப் பொலிசுக்குப் புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இன்னும் இதுசம்பந்தமான முழு விபரங்களடங்கிய புகார்க் கடிதமொன்றை கீரிமலை, போயிட்டி, காங்கேசன்துறைப் பகுதி மக்கள் வடபகுதி பொலிஸ் சுப்பிரீண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

தெல்லிப்பளை யிலிருந்தும் மல்லாகத்திலிருந்தும் இரு வாலிபக் கோஷ்டியினர் நிர்வாணகோலத்தில்கீரிமலை நீரூற்றில் நீராடுகையில் இருகோஷ்டியினருக்குமிடையில் பலத்த கைகலப்பு ஏற்பட்டதாகவும், பெண்கள் நீராடும்பகுதியில் ஒரு வயோதிப ஆடவரும் நீராடியதாகவும் மற்றும் கீரிமலை மடத்தில் தங்கியிருந்த ஒரு பெண்ணிடம் ஒருவர் முறைதவறி நடக்க எத்தனித்தபோது கண்டுபிடிக்கப்பட்டு பொலிசில் ஒப்படைக்கப்பட்டதுபற்றியும் சுப்ரீண்டனுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

# கட்டுரைப் போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

கரணவாய் தெற்கு ஆதரவன் இளைஞர் மன்றத்தினர் அடுத்தமாதம்நடாத்தவிருக்கும் பாரதி விழாவை முன்னிட்டு வடமாகாண மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றினை நடபத்த முடிவுசெய்துள்ளனர். 'அன்றைய பாரதியும், இன்றைய சமுதாயமும்' என்னும் தலைப்பில் நடாத்தப்படவிருக்கும் இக்கட்டுரைப் போட்டியில் 15—22 வயதுக் இடைப்பட்டவர்களே கலந்துகொள்ளலாமென்றும் கட்டுரைகள்யாவும் அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் வரவேற்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸார் நடவடிக்கை

நாரந்தனை, வியாழன்

ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த சில பகுதிகளில் சில காலமாக நடைபெற்றுவந்த அசம்பாவிதங்கள் எல்லாம் ஊர்காவற்றுறைப் பொலிஸாரின் திடீர் நடவடிக்கையினால் அடங்கியுள்ளன.

ஊர்காவற்றுறைப் பொலிஸார் இரவு பகலாக ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பல பகுதிகளிலும் திடீர் ரோந்து சுற்றி வருவதினால், எந்தவித அசம்பாவிதங்கள் நடைபெறாமல் தடைசெய்யப்படுகிறது. சட்டவிரோதமாக கள்ளுக்கடைகள் வைத்திருப்பவர்கள் மீதும், இரவு 8 மணிக்குப்பின் தெரு வீதிகளில் கூட்டமாக நிற்பவர்கள் மீதும், பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

# பாதயாத்திரை

யாழ்ப்பாணம், சனி

நல்லூர்த் தேர்த்திருவிழா பஜனைக் கோஷ்டியொன்று. ஸ்ரீமத் தியாகராஜா சுவாமிகள் தலைமையில் அடுத்த மாதம் 2-ம் திகதி நள்ளிரவு ஏழாலை இலந்தையடி வயிரவர் கோவிலடியிலிருந்து பாதயாத்திரையை ஆரம்பித்து, மறுநாள் கோவிலை வந்தடையும்.

# குருபூசை

உடுப்பிட்டி, வெள்ளி

இம்மாதம் 12ம்திகதி உடுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில்இந்து சன்மார்க்க சங்கத்தினரால் சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசையும் விழாவும் நடாத்தப்படவிருக்கிறது. இவ் விழாவிற்கு ஆழ்வாப் பிள்ளை தலைமை வகிப்பார்.

பக்திப்பாடல்களும், உபந்நியாசமும் நாடகம் ஒன்றும் இடம் பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# "தமிழ் தட்டெழுத்தாளருக்கு பாகுபாடின்றி நியமனம் வழங்கவும்"

—எஸ். ஜே. வி.

கொட்டாஞ்சேனை, வெள்ளி

சித்தியடைந்தவர்களுக்கு இன்னும் நியமனம் வழங்காதிருக்கும்போது அதற்கிடையில மற்றொரு பரீட்சையா என இம்மாதம் 26-ம் திகதி நடைபெறவிருக்கும் தமிழ் தட்டெழுத்தாளர் பரீட்சை பற்றி தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திறைசேரிக் காரியதரிசியிடம் கேட்டிருக்கிறார்.

ஏற்கெனவே இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்குக் காலவரிசைக் கிரமப்படியே நியமனம் வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

# காரைநகரில் உப்பளமும் மீன்பிடித் துறைமுகமும்

## அமைத்துத் தருமாறு சங்கம் மகஜர்

யாழ்ப்பாணம், சனி

காரைநகரில் ஒரு உப்பளத்தையும், ஒரு மீன்பிடித் துறைமுகத்தையும் அமைத்துத் தருமாறு காரைநகர் பொதுநல சேவைச் சங்கம் மீன்பிடி இலாகா டைரக்டருக்கும், உப்பு இலாகா அத்தியட்சகருக்கும் மகஜர்களை அனுப்பியுள்ளது.

காரைநகர் மீனவர்களின் மேலதிக மீன்களைக் குளிரூட்டிப் பக்குவப் படுத்தக் கூடிய முறையில் இங்கு ஐஸ் நிலையம் உண்டென்றும் மேலும் இங்கு ஒருமீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படுமானால் அது மீன் பிடித் தொழிலின் அபிவிருத்திக்கு உறுதுணையாகவிருக்கும் என்றும் மேற்படி சங்கம் மீன்பிடி இலாகா டைரக்டருக்கு அனுப்பிய மகஜரில் குறிப்பிட்டுள்ளது

ஐயனார் கோவிலடியில் உப்பளம் அமைக்கக் கூடிய வசதியிருப்பதாகவும் அங்கு ஒரு உப்பளம் அமைக்குமாறும் உப்பு இலாகா அத்தியட்சரையும் மேற்படி சங்கம் கோரியுள்ளது. —வி. நி.

# 'கதிர்காமம் திருடுவதற்குரிய இடமில்லை'

திசமகாரகம, வெள்ளி.

'கதிர்காமம் திருடுவதற்குரிய இடமில்லை. அது புனிதமான வழிபாட்டு இடம். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் இங்கு வந்து வழிபாடு செய்கிறார்கள். ஆனால் நீர் இங்கு திருடுவதற்காகச் சென்றிருக்கிறீர் என திசமகாரகம மாஜிஸ்திரேட் திரு. ஜி. ஜி. டி. டி. சில்வா பிராங் கோட்வின் என்பவருக்குக் 6வார கடூழியச்சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கையில் தெரிவித்தார்.

கதிர்காமத்தில் திருவிழாவின்போது 40 ரூபா கொண்ட பேர்சைத் திருடியதாக கோட்வின்மீது வழக்கு தொடரப்பட்டிருந்தது.

வியாபாரம பெருக
விளம்பரம செய்க


# இளம் பற்களை உரமாக வளரச் செய்யவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்
என்றும் பாவியுங்கள்

# போர்ஹான்ஸ்
பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்ந்துள்ளது.

# பெரும்பாலான பற்கள் ஈறு வியாதிகளினால் இழக்கப்படுகின்றன

அலைவாசிக்கு மேற்பட்ட சிறுவர்களும் கிட்டத்தட்ட எல்லா இளைஞர்களும் ஈறு அழுகல் காரணமாக தமது பற்களை இழக்கின்றனர் என உலகச் சுகாதார நிபுணர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். பெரும்பாலான பற்கள் அழுகியல்ல ஆனால் இவை ஈறு வியாதியினாலேயே இழக்கப்படுகின்றன என இவர்கள் கூறுகின்றனர்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளிலிருந்தே சிறுவர்களுக்கு உரமான வெண்ணிறப் பற்கள் வளரும். தினமும் போர்ஹான்ஸ் கொண்டு ஈறுகளைத் தேய்த்து பல் துலக்குவதால் ஈறுகள் உரமாகவும் உறுதியாகவும் வளரும். அத்தோடு, பற்களும் சுத்தமாயும் வெண்மையாயும் இருக்கும்.

இளமையில் நன்முறையில் கவனியாது விட்டபடியால்தான் பெரும்பாலான இளைஞர்கள் ஈறுவியாதிகளினால் அவைப்படுகின்றனர். இதற்கு தினமும் போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு பல்துலக்குதல் அவசியம். இதனால் அவர்களது ஈறுகள் உறுதியாவதோடு பற்களும் வெண்மையாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

# ஒரு பல்வைத்தியரின் குறிப்புக்குத் தயாரிக்கப்பட்டது போர்ஹான்ஸ்

புகழ் பெற்ற பல் வைத்தியரான டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் டி. டி. எஸ். என்பவரின் தயாரிப்பு முறைக்கு ஈறுகளை பாதுகாக்கவல்ல விசேட மருந்துகளைக் கலந்து தயாரிக்கப்பட்டது.

பொங்கும் நுரையினால் பற்களை உரமாயும் வெண்மையாயுமோ, ஈறுகளை உறுதியாயும் ஆரோக்கியமாயுமோ வைத்திருக்க முடியாது. ஈறுகளைத் தேய்த்து பற்களைச் சுத்தஞ் செய்ய போர்ஹான்ஸ் போன்ற ஒரு விசேட தயாரிப்பு முறை அவசியம்.

ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே உரமான பற்கள் வளரும், ஈறுகள் எவ்வளவு காலத்திற்கு உறுதியாயும் ஆரோக்கியமாயும் இருக்கின்றனவோ அவ்வளவு காலத்திற்கு இவை உரமாயும் இருக்கும். போர்ஹான்ஸ் பாவிப்பது ஆரோக்கியமான வழக்கம். இதனால் உறுதியான ஆரோக்கிய ஈறுகளில் உரமான வெண்ணிறப் பற்கள் வளரும்.

# உரம் பற்களை என்றும் இளமையுடன் காக்கவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்
என்றும் பாவியுங்கள்

# போர்ஹான்ஸ்
பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்ந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளமபரம

### உள்ளூராட்சி சேவை
### காவற்காரர் பதவி
### உரும்பிராய் ப. ச.

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப் பங்களின் முடிவுதிகதி 12-9-67.

3. வேதன அடிப்படை: ரூ.540—30 X 8 + 24 X 1- ரூ. 804 வருடாந்தம்.

4. முழு விபரங்களுக்கும் 1967-ம் ஆண்டின் 8 மாதம் 25-ந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் 4-வது பகுதியைத் தயவுசெய்து பார்க்கவும்.

க. பத்மராசா
உரும்பிராய் ப. ச.
தலைவர்.

8-8-1967,
உரும்பிராய்,
ப. ச. அலுவலகம். 59

### உள்ளூராட்சி சேவை
### சேவகர் பதவி
### உரும்பிராய் ப. ச.

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப் பங்களின் முடிவு திகதி: 12-9-1967.

3. வேதன அடிப்படை: ரூ.540—30 X 8 + 1 X 24- ரூ. 604. வருடாந்தம்.

4. முழு விபரங்களுக்கும் 1967-ம் ஆண்டின் 8 மாதம் 25-ந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் 4-வது பகுதியைத்தயவுசெய்துபார்க்கவும்.

க. பத்மராசா
உரும்பிராய் ப. ச.
தலைவர்.

8-8-1967,
உரும்பிராய்,
ப. ச. அலுவலகம். 58

அரசாங்க கேள்விகள்
கல்வித் திணைக்களம்

என் 2293- யா/கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிக் கட்டிடம் திருத்துதற்குரிய கேள்விகள் முடிவு திகதி 4-9-67.

இதன் முழு விபரங்களுக்கும் 11-8-67ந் திகதிய அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் 1ம் பகுதி, 2ம் தொகுதியைப் பார்க்கவும்.
G P 4500

### மகாஜனக் கல்லூரி
### புதிய மாணவர்களைச் சேர்த்தல்: 1968

1968-ம்ஆண்டுத்தொடக்கத்தில் எட்டாம் [J. S. C.] வகுப்பிலும் ஒன்பதாம் [O. L. Prep] வகுப்பிலும் சேர விரும்பும் மாணவர்கள் 28-8-67க்கு முன்னர் மனுச் செய்யவும். தகுதியுள்ள ஒருசிலரையே சேர்த்துக் கொள்ள முடியும்.

அதிபர்
மகாஜனக்கல்லூரி,
தெல்லிப்பழை. 62

### கேள்வி விளம்பரம்

சுழிபுரம் கிராமசபைத் தலைவரால் புத்தடி சிவன் கோவில் ரோட்டு வேலைக்கான சீல் வைத்த கேள்விகள் 25-8-67 காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கட்டுக்காசாக ரூபா 50-00ம், கேள்விப்பத்திரக் கிரயமாக ரூபா 2-00ம் சுழிபுரம் கிராமசபை அலுவலகத்தில் செலுத்தியதன் மேல் 23-8-67 மாலை 4-30 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். மேலதிக விபரங்களை அறியவிரும்புவோர் சுழிபுரம் கிராம சபைத் தலைவரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

சு. கந்தசுவாமி,
தலைவர்,
சுழிபுரம் கிராமசபை.
சுழிபுரம்,
10-8-67. 65

### இ. ச. நிலைய ஆண்டு விழா

சுழிபுரம், வெள்ளி பனிப்புலம் அம்மாள் சனசமூக நிலைய கிராம முன்னேற்றச் சங்க 21-வது ஆண்டு நிறைவுவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை புலவர் கா. வேல்முருகன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. விரிவுரைகள், விளையாட்டுப் போட்டிகள், கலைநிகழ்ச்சிகள் ஆகிய அம்சங்கள் விழாவில் இடம் பெறவிருக்கின்றன.

# "ராதா ஒருபோதும் பணத்தை பாக்கட்டில் வைக்கமாட்டார்
## எவ்வளவு தொகையானாலும் இடுப்பில் கட்டியிருப்பார்"
### வழக்கு விசாரணையில் வாசு சாட்சியம்

சென்னை, ஆக. 10

ராதா எப்போதும், எவ்வளவு பெரிய தொகையாக இருந்தாலும் தனது இடுப்பில் கட்டிவைத்திருப்பாரே யொழிய ஒரு பாக்கட்டில் வைத்திருக்கமாட்டார் என்று திரைப்படத்தயாரிப்பாளர் வாசு, எம். ஜி. ஆரைச் சுட்டதாகவும் தம்மைத் தாமே சுட்டுக் கொண்டு தற்கொலைசெய்ய முயன்றதாகவும் நடிகர் எம். ஆர். ராதா மீது குற்றஞ்சாட்டித்தொடரப்பட்ட வழக்கில் செஷன்ஸ் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் கூறினர்.

அடுத்த நாள் நல்ல நாளாகவிருப்பதாகவும், சம்பந்தப்பட்டவர்கள்அன்று இரண்டு லட்சம் ரூபாய் முற்பணம் தரவிரும்புவதாகவும் ராதா கூறியதோடு இன்றே சந்திக்கவேண்டும் என்று வற்புறுத்தினர். சில நிமிடங்கள் பேசுவதற்கு எம். ஜி. ஆர். ஒப்புக்கொண்டார் உடனே நானும் ராதாவும் எனது காரில் புறப்பட்டோம். வாசலில் காவல்காரன் என்னைப் பார்த்துவிட்டு கேட்டைத் திறந்தான். வரவேற்பறையில்வேலைக்காரன் ரத்தினம் உட்காருவதற்கு ஆசனம் காட்டிவிட்டு எம். ஜி.ஆருக்கு அறிவித்தார்.

எம். ஜி. ஆர். வந்து எங்களுக்கு வணக்கம் செலுத்தி விட்டு எனக்கு இடது பக்கம் இருந்த ஆசனத்தில் அமர்ந்தார். ராதா எழுந்து எம். ஜி. ஆரின் முன்வந்து நின்று இருமினர். என்ன என்று எம். ஜி. ஆர். கேட்ட போது தமக்கு 'பித்தவாதி' ஏற்பட்டிருப்பதாகவும் இது பேதாதென்று என் வீட்டில் கீரை வேறுசாப்பிட்டுவிட்டதாகவும் ராதா கூறினர்.

எம். ஜி.ஆர். அவரை அமரச் சொல்லியும் ராதா அமர்ந்து கொள்ளவில்லை. கோயம்புத்தூர் கோஷ்டியினர் பற்றி எம். ஜி. ஆரிடம் கூறும்படி ராதா கூறினர்.

நான் கூறியவைகளைக் கேட்ட பின் மாதம் பத்து 'கால்ஷீட்' தரத் தயாரென்றும் கடைசி மாதம் தொடர்ச்சியாக 'கால் ஷீட்' தருவதாகவும் எம். ஜி. ஆர். கூறினர்.

நடிப்பதற்காகவாவது எம். ஜி. ஆர்.ஒப்புக்கொண்டாரே என்று நான் மனதுக்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கையில் 'டப்' என்ற சப்தம் கேட்டது. அதிர்ச்சியடைந்துதலையைத் தூக்கினேன். எம். ஜி.ஆரின் இடது பக்கத்தை நோக்கி ராதா துப்பாக்கியை குறி வைத்துக் கொண்டிருப்பதை கண்டேன். 'சண்டாளா: சதிகாரப்படுபாவி என்ன சதிசெய்தாய்' என்று கத்திய படியே ராதாவுக்கும்எம். ஜி, ஆருக்குமிடையில் பாய்ந்து

(6-ம் பக்கம் பார்க்க)

### கல்வி

மெக்கானிக் பாடங்கள்

மோட்டார் டிரக்டர் டீசல் மெக்கானிக் பாடங்களும், பயிற்சியும் ஆறு [6] மாத காலத்தில் நவீனமுறையில் போதிக்கப்படும். விரும்பும் மாணவர்கள் 28-8-67க்கு முன் விண்ணப்பிக்கவும்; அன்றி நேரில் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ ராஜ ஓட்டொமபயில் என்ஜினியறிங் இன்ஸ்ரிரியூட், 8/4 ஸ்ரான்லி ரோட், மேல்மாடி யாழ்ப்பாணம். 2488

### வரிவிளம்பரம்

#### விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள்:

E Y 6000 தொடர்புள்ள 5 H P மோட்டார் சையிக்கிள் உடன்விற்பனைக்கு. நல்ல நிலைமையில் உள்ளது. 'சண்முக வாசா', முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 2522

உடுப்பிட்டி சந்திக்கு அண்மையிலுள்ள சிலுவில் வயல் மத்தியில் பள்ளமான அதிகமான விளைச்சல் பூமி 18 பரப்பு விற்பனைக்குண்டு. விபரங்கட்கு உடனே தொடர்பு கொள்ளவும் S. நடராசா, கூட்டுறவுச் சங்கப், பரிசோதகர், ஏழாலை மேற்கு, சுன்னாகம். 2481

#### வைத்தியம

ஆயுள்வேத வைத்திய சாலை ச. இராசதுரை. ஊரெழு வடக்கு, சுன்னாகம் ரோட், பதிவு இல. 1965. இவ்விடத்தில் 1. சிறுபிள்ளை வைத்தியம். 2. புண்ணுக்கு மருந்துகட்டுதல், 3. யோகாசனம், 4. வாத நோய்க்குரிய வைத்தியம், 5. கரப்பன், படர்தாமரை முதலிய சகல வியாதிகட்கும் சிறந்த வைத்தியம் செய்யப்படும். சகலரும் சிகிச்சைபெற வசதியுண்டு. 2487

வீடு:

K. K. S. ரோட் தாவடிச் சந்திக்கருகாமையில் சகல வசதியும் பொருந்திய வீடு வாடகைக்கு உண்டு. ஆ. நடராசா, தாவடி, கொக்குவில். 2521


மனோகரா
யாழ்ப்பாணம
தினசரி பி. ப. 2.30, 6-30, 9-45
(போயா நாட்களில் 4 காட்சிகள்)
என். ரி. ராமராவ் ஜமுனா, ராஜ்ஸ்ரீ, வாணிஸ்ரீ,
விஜயலட்சுமி, ராஜநலா கிரிஜா
முதலியோர் திறம்பட நடித்த
காதல், வீரம், சண்டை, களியாட்டம் நிறைந்த
களிப்பூட்டும் உணர்ச்சிமயமான சித்திரம்



பெண் ஜென்மம்!

பொலிஸ் பகுதியின் விண்ணப்பப் பத்திரங்கள்
பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கானதும், உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டருக்குமான விண்ணப்பப் பத்திரங்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
வர்த்தகக் கலாசாலை
[ஸ்ரீ லங்கா புத்தகசாலைக்கு அருகாமையில்]
230, கே.கே.எஸ்.ரோட்,
யாழ்ப்பாணம்.

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 930
போயாதினங்களில் 4காட்சிகள்
ஏ. வி. எம், ராஜன்
கே. ஆர். விஜயா
நடித்த
மனம் ஒரு குரங்கு

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
நடித்த
நீ

REGAL JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Anthony Quinn &
Elsa Martinelli
in
Marco Polo The
Magnificient

4-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
விஜிதா [ஹட்டன்]
விஜயா [மட்டக்களப்பு]
பிளாஸா [வெள்ளவத்தை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
மொடேர்ன் [பதுளை]
தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!
புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்
ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த





ஏவி. எம். புரொடக்ஷனுய
அன்பே வா
(ஈஸ்ட்மென் கலர்)
கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்
இசை: மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டப்' என்ற சப்தம்: துப்பாக்கியுடன் ராதா நின்றார்

## எம். ஜி. ஆர். சுடப்பட்டது பற்றி வாசு சாட்சியம்

சென்னை, ஆக. 10

'டப்' என்று சப்தம் கேட்டு தலையைத் தூக்கினேன், எம். ஜி. ஆரின் இடது பக்கமாக துப்பாக்கியைக் குறி வைத்தபடி ராதா நின்றார். 'சண்டாளா சதிகாரப்படுபாவி என்னை சதி செய்திட்டே' என்று கத்தியபடி ராதாவுக்கும் எம். ஜி. ஆருக்கு மிடையில் பாய்ந்தேன்.'

இவ்வாறு இன்று எம். ஜி. ஆர்—ராதா வழக்கில் படத்தயாரிப்பாளர் வாசு பிராசிகூஷன் தரப்பில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

எம். ஆர். ராதா — எம். ஜி. ஆர். துப்பாக்கிச்சூட்டு வழக்கு இன்று மீண்டும் சென்னை செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. படத்தயாரிப்பாளர் வாசு இன்று சாட்சியமளித்தார்.

உலகத்தில் எனக்கு ராதா தான் உற்ற நண்பர். எம். ஜி. ஆரைவிட எனக்கு ராதா தான் வேண்டியவர் என்று வாசு கூறினார்.

அரசாங்க வழக்கறிஞரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் வாசு இவ்வாறு கூறினார்.

தாம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரென்றும் வாசு கூறினார். [வாசு கதர் சட்டையும் துண்டும் அணிந்திருந்தார்.] புதுக்கோட்டைக்கு 1936-ல் நேருஜியும் கிருஷ்ணமூர்த்தியும் விஜயம் செய்தபோது அவர்களுக்கு மாலையிட்டபோது தாம் கைது செய்யப்பட்டதாக வாசு கூறினார்.

மதுவிலக்குப் பிரசாரத்தின் போதும் வெளிநாட்டுப் பொருட்களைப் பகிஷ்கரித்து சத்தியாக்கிரகம் செய்தபோதும் கைதுசெய்யப்பட்டதாக அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நான் எனது நடிகை மனைவியான கே. எல். வசந்தாவுக்கு உதவியாகவிருப்பதற்காக 20 ஆண்டுகளுக்குமுன் சென்னைக்கு வந்தேன். அப்போது பண வசதியுடன் இருந்தேன். படம் தயாரிக்க விரும்பினேன்.

இந்த முயற்சியில் பணம் வீணாகி பெரிதும் பாதிக்கப்பட்டேன். ஆனால் டைரக்டர்கள் கிருஷ்ணன்—பஞ்சு எனக்கு உதவிசெய்ய முன் வந்தார்கள். கிருஷ்ணன்—பஞ்சு பம்பாயிலிருந்து படத்துக்கான கதையை கொண்டுவந்தனர். அதை டைரக்ட் செய்வதாகவும் உறுதி கூறினார்கள். இதில் எம். ஜி. ஆர். கதாநாயகனாக நடிக்க வேண்டுமென்பதும் நான் தயாரிப்பாளராக இருக்க வேண்டுமென்பதும் நிபந்தனை. இதற்கு நான் ஒப்புக்கொண்டு எம். ஜி. ஆரை சந்தித்து அவருடைய ஒப்புதலையும் பெற்றேன். மற்ற நடிகர்கள் நடிகைகளின் உதவியும் கிடைத்தது. படத்தைத் தயாரிப்பதற்கு ராதாவின் பண உதவியும் கிடைத்தது.

ராதாவை பல ஆண்டுகளாக தெரியும் என்றும் செக்மூலம் 50 ஆயிரம் ரூபாயும் பணமாக 50 ஆயிரம் ரூபாயும் கொடுத்து உதவியிருக்கிறார் என்றும் வாசு கூறினார்.

இந்தப் பணம் ராதாவுக்கு வட்டியுடன் திருப்பிக்கொடுக்கப்பட்டது. பெற்றால்தான் பிள்ளையா என்ற எனது படத்தில் ராதா கௌரவ நடிகராக நடித்தார் என்றும் சாட்சி குறிப்பிட்டார்.

எம். ஜி. ஆர். தோட்டத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்களை சாட்சி விவரிக்கையில், ராதா எனது வீட்டுக்கு வந்து, எம். ஜி. ஆரை வைத்துப் படம் எடுப்பதில் கோயம்புத்தூரில்சிலர் விருப்பம் கொண்டிருப்பதாகவும் மாதம் எழுநூற்றைம்பது ரூபாயும், வருமானத்தில் இருபத்தைந்து வீதமும் தரத்தயாராய் இருப்பதாகவும் தெரிவித்தார் என்று வாசு கூறினார்.

எம். ஜி. ஆருடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யும்படி ராதா கேட்டுக்கொண்டார் என்றும், அடுத்து ராதா தம் வீட்டுக்கு வந்தபோது அவர்சிலுக்குசட்டையும்மூக்குப்பொடி நிறத்தில் சால்வையும் அணிந்திருந்தார் என்றும் வலது கையில் மண்ணிறத்திலான பைகொண்டு வந்தார் எனறும் வாசு கூறினார்.

எம். ஜி. ஆர். தேர்தல் பிரசாரத்துக்குப் போய் இருக்கிறார் என்று கூறினேன். ராதா தமது காரை திருப்பி அனுப்பிவிட்டு என் வீட்டில் தங்கினார். ரசமும், கீரையும் சேர்ந்த உணவு அருந்தினார். கோயம்புத்தூர் கோஷ்டியினரையும் எம். ஜி. ஆரிடம் கூட்டிப்போவோம் என்று கூறியதற்கு ராதா அவசியமில்லைஎன்றார். ராதா கேட்டுக்கொண்டதால் மீண்டும் எம். ஜி. ஆருக்குப் போன் பண்ணினேன். எம். ஜி. ஆர். பேசினார். இப்போதான் திரும்பியதாகவும், களைப்பாய் இருப்பதால் அடுத்தநாள் சந்திப்பதாகவும் அவர் கூறினார்.

## தேசிய சுவீப் முடிவுகள்

நேற்று மாலை இழுக்கப்பட்ட 154-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு

52 L 0609 - ரூ. 100,000

2-வது பரிசு

16 E 0603 - ரூ. 40.000

3-வது பரிசு

26 R 0691 - ரூ. 10,000

ரூபா 1365 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| 32 H 0019 | 54 Z 0761 |
| 26 M 0880 | 36 A 0199 |
| 49 C 0449 | 01 X 0390 |
| 55 P 0660 | 41 L 0621 |
| 42 Y 0371 | 48 L 0132 |
| 05 U 0478 | 16 J 0549 |
| 07 T 0128 | 05 D 0660 |
| 55 H 0474 | 53 E 0326 |
| 49 H 0434 | 08 S 0782 |
| 32 H 0815 | 06 K 0612 |
| 16 G 0231 | 15 Y 0276 |
| 21 Y 0465 | |

04 Q 0084

[அல்லது G எழுத்தாகவும் இருக்கலாம்]

| | |
|---|---|
| 43 J 0704 | 55 O 0024 |
| 07 H 0479 | 35 H 0588 |
| 24 L 0035 | 56 O 0648 |
| 14 Q 0016 | 34 J 0968 |
| 04 V 0893 | 14 X 0670 |
| 19 J 0469 | 01 Z 0652 |
| 48 R 0165 | 52 A 0253 |
| 53 P 0468 | 48 M 0601 |
| 56 U 0559 | 11 Z 0630 |
| 20 P 0203 | 13 V 0857 |
| 01 P 0811 | 08 B 0142 |
| 52 X 0265 | 49 C 0780 |
| 42 F 0160 | 47 F 0046 |
| 30 A 0641 | 44 S 0020 |
| 05 C 0329 | 23 F 0253 |
| 33 H 0263 | 37 Y 0564 |
| 51 Z 0234 | 08 G 0157 |
| 45 Q 0763 | 55 O 0551 |
| 56 U 0500 | 02 C 0727 |
| 57 K 0142 | 10 Z 0924 |
| 35 K 0747 | 45 Q 0865 |
| 40 M 0464 | 40 K 0289 |
| 02 M 0690 | 30 F 0380 |
| 10 E 0883 | 14 Z 0951 |
| 36 S 0060 | 02 B 0610 |
| 37 V 0916 | 29 J 0856 |
| 25 C 0992 | 56 D 0626 |
| 58 X 0244 | 36 K 0619 |
| 55 J 0935 | 47 N 0185 |
| 24 R 0860 | 06 C 0781 |
| 44 P 0150 | 23 S 0496 |
| 36 K 0255 | 53 W 0219 |
| 06 F 0237 | 47 M 0310 |
| 28 O 0309 | 12 Z 0075 |
| 45 M 0836 | 49 C 0737 |
| 31 T 0493 | 27 Q 0397 |
| 56 C 0419 | 18 O 0372 |
| 02 H 0912 | 30 N 0881 |

[இவை உறுதிப்படுத்தப் படவேண்டும்.]

## ஆஸ்பத்திரி தரம் உயருமா?

மூதூர், வியாழன்

மூதூர்ப்பகுதியில் வாழும் சுமார் 40 ஆயிரம் மக்களின் நல அபிவிருத்திக்கு உதவுவது மூதூரில் உள்ள வைத்தியசாலை. ஆனால் வைத்தியசாலையின் தரமோ இது வரையில் உயர்ந்ததாய்த் தெரியவில்லை. இரு வைத்திய அதிகாரிகளும் மூன்று அப்போதிக்கரிமாரும் பொறுப்பான உத்தியோகத்தர்களாய் கடமையாற்றும் இவ் வைத்தியசாலை மக்களின் வைத்திய தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் இல்லையே என்ற குறைபாடுகள் நாளுக்கு நாள்வலுப்பெற்று வருகின்றன. சுமார் 5ஆண்டுகளுக்கு முன்பு பலஎத்தனங்களின் பயனாக அமைக்கப்பட்ட பிரசவ வார்ட்டைத் தவிர உள் நோயாளர்களுக்கென்று விடப்பட்டிருக்கும் கட்டிடப்பகுதி ஏனோதானோ வென்ற நிலையில் கிடந்து வருகிறது. உள்நோயாளர்களுக்குத் தக்கதான கட்டில்களோ அன்றிக் காற்றோட்டமான வசதிகளோ இங்கு கிடையாது.

## எதிரிக்கு மரணதண்டனை

### பூவரசங்குளம் கொலைவழக்கில்தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

பூவரசங்குளம் கொலை வழக்கில் எதிரியான சுப்பையா கந்தசாமி என்ற வாலிபருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. செப்டம்பர் மாதம் 20-ம் திகதி தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும்.

ஜூரி சபையினர் 5—2 ஆக பிரிந்து கூடிய தொகையினராக கொலைக் குற்றத்திற்கு எதிரி குற்றவாளியெனத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் எதிரிக்கு நேற்று மாலை மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வீ. மாணிக்கவாசகர் முன்னிலையில் கடந்த நான்கு தினங்களாக விசாரணை செய்யப்பட்டது.

மரணதண்டனை ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கு காரணம் காட்ட முடியுமா? என எதிரியிடம் கேட்கப்பட்டபோது பயத்தினாலும், அவசரப் புத்தியினாலும், தற்பாதுகாப்பிற்காகவும் அப்படி நடந்து கொண்டதாக எதிரி கூறினார்.

எதிரி கூண்டிலிருந்து இறங்கிச் சென்றபோது, எதிரே வந்த தகப்பனாரைப் பார்த்து சிரித்தபடி சென்றார்.

இவ்வழக்கில் வவனியா பிரிவிலுள்ள பூவரசங்குளம் என்ற இடத்தில் 65-ம் ஆண்டு டிசம்பர் 10-ம் திகதி சுப்பையா கந்தசாமி என்பவர் புஷ்பராசா சுப்பையாவை சுட்டுக் கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

அசைஸ் வுசாரணை மீண்டும் இம்மாதம் 14-ம் திகதி ஆரம்பமாகும்.

## "ராதா ஒருபோதும்...

[5-ம்பக்கத்தொடர்ச்சி]

நின்றேன். ராதா முனகிக் கொண்டே இரண்டடி பின்னே சென்றார். பிறகு தனது வலதுபுற நெற்றிப் பொட்டில் சுட்டுக்கொண்டு சோபாவின் அருகில் நிலத்தில் முகம் குப்புற விழுந்தார்.

சூட்டுக்கு முன்பதாக ராதா என்ன செய்தார் என்று தெரியாதென்று சாட்சி கூறினார். வாசு மேலும் கூறியதாவது அப்போது நான் எம். ஜி. ஆருடன் பேசிக் கொண்டிருந்தேன். எம். ஜி. ஆர். காதைப் பொத்திக் கொண்டு" என்ன அண்ணா, இப்படிச் செய்திட்டீங்களே" என்று கூறியபடி எழுந்திருந்தார். அவர் ஆஸ்பத்திரிக்கு போக விரும்பினார். கார் வரைக்கும் நானும் போனேன். காரின் பின் சீட்டின் இடது பக்கம் எம். ஜி. ஆர். ஏறிக் கொண்டார். வலது பக்கம் அவருடைய வளர்ப்பு மகன் அப்பு ஏறிக் கொண்டார். நானும் ஏறப்பார்த்தேன். ஆனால் ராதாவைக் கவனிக்கும்படி எம். ஜி ஆர். என்னிடம் கூறினார். வரவேற்பறைக்குள் நான் மீண்டும் வந்த போது ராதா துப்பாக்கியைப்பிடித்தபடி தடுமாறியபடி சுற்றிலும் பார்த்துக் கொண்டிருந்தார், நான் பின்னால் சென்று துப்பாக்கியைப் பறிக்க முயற்சித்தேன். அவர் மீறிக் கொண்டு கழுத்தின் வலது பக்கம் சுட்டுக் கொண்டார். ராதாவின் கையை முறுக்கி ஆயுதத்தைப் பறித்துக் கொண்டு போர்ட்டிக் கோவுக்கு வந்தேன். அங்கே எம். ஜி. ஆரின் மனைவி ஜானகி அம்மாள், கே. ஆர். ராமசாமியின் மனைவி கல்யாணி அம்மாள் பணியாள் பூரணத்தம்மாள் ஆகியவர்கள்இருந்தார்கள். ரிவால்வரை ரத்தினத்திடம் கொடுத்தேன். அதை அவர் கார் துடைக்கும் மஞ்சள் துணியில் சுற்றி காரின் சீட்டுக்குக் கீழே வைத்தார். ராதா என்னைத் தொடர்ந்து வந்து கேட்டின் வழியாகப் போவது தெரிந்தது.

வாசுதொடர்ந்துசாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

எம். ஜி. ஆர். அனுமதிக்கப்பட்டிருந்த ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு நான் போய்ச் சேர்ந்த போது ஆஸ்பத்திரி மைதானத்தில் எம் ஜி. ஆரின் அண்ணன் சக்கரபாணியைப் பார்த்தேன். நடந்த சம்பவங்களை அவரிடம் சொன்னேன். கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு மற்றொரு காரில் தம்மைத் தொடர்ந்துவரும்படியும் கூறினார். வழக்கறிஞர் பி. ராமன் வீட்டுக்கு அவர் என்னைக் கூட்டிச் சென்றார். ராமன் அங்கு இருக்கவில்லை. அங்கு வேறொரு வழக்கறிஞர் இருந்தார். கைத்துப்பாக்கியைப் பொலிசில் ஒப்படைக்கும்படி அவரே யோசனை கூறினார். அவ்விதமே நாங்கள் செய்தோம். எனது ஷேர்ட்டில் இரத்தக்கறை இருந்ததையும் ஷேர்ட் பட்டன் ஒன்று அறுந்திருந்ததையும் கவனித்த பொலிசார் ஷேர்ட்டையும் கழற்றித் தரும்படி கேட்டனர். நானும் அவ்விதமே செய்தேன்.

ராதா எப்போதும் எவ்வளவு பெரிய தொகையாக இருந்தாலும் அதை இடுப்பில் கட்டிக் கொண்டிருப்பாரேயொழிய பாக்கெட்டில் வைத்திருக்க மாட்டார்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் என். டி. வானமாமலை குறுக்கு விசாரணை செய்த போது சாட்சி வாசு கூறியதாவது:-

சம்பவம். நடைபெறுவதற்கு முன்னர் வடமேற்கு திசையை நோக்கியபடி எம். ஜி ஆருடன் பேசிக் கொண்டிருந்தேன். நான் எதையும் எதிர்பார்த்திருக்கவில்லை. ராதாவின் நெற்றிப் பொட்டிலிருந்து இரத்தம் வழிந்ததைக் கண்டு அவர் உயிருக்கு ஆபத்து என நான் நினைத்தேன்.

வழக்கறிஞரின் கேள்விகளுக்கு வாசு மேலும் பதிலளிக்கையில் கூறியதாவது:-

ராதாவிடம் நான் எட்டிச் சென்றபோது எம். ஜி. ஆர். என் பின்னால் நின்றார், என் பின்னால் ஒரு சாண் தூரத்தில் அவர் நின்றிருந்திருக்கலாம். அதைச் சரியாகச் சொல்ல முடியவில்லை. ராதாவின் கைத்துப்பாக்கி முனையிலிருந்து மூன்று நான்கு அங்குல தூரத்தில் நான் நின்றேன்.

ராதாவும் சாட்சியும் நின்ற தூரம் பற்றி முன்னர் கூறியதை சாட்சி இப்போது மாற்றிச் சொல்வ

[3-ம் கலம் பார்க்க]

(5-ம் கலத்தொடர்ச்சி)

தாக எதிரி தரப்பு வழக்கறிஞர் கூறிய போது சாட்சி அதை மறுத்தார்.

இந்தக் கேள்வியைப் பப்ளிக்பிராசிக்கியூட்டர் எழுந்து நின்று ஆட்சேபித்தார். எதிரிதரப்பு வழக்கறிஞர்:- ராதா எப்படி விழுந்தார்?

சாட்சி வாசு: முகம் குப்புற விழுந்தார். அவரது கைகள் விரித்துக் கிடந்தன.

வழக்கறிஞர்: அவரது கையில் அப்போதும் கைத்துப்பாக்கி இருந்ததா?

சாட்சி; இருந்ததா இல்லையா என்பதை நான் கவனிக்கவில்லை.

வழ: ராதா இறந்து போய் விடுவாரா அல்லது உயிருடனிருப்பாரா என நீர் எம். ஜி. ஆருடன் போட்டிக்கோவிற்குச் சென்ற பொழுது நினைக்கவில்லையா?

சாட்சி: நான் எதையும் நினைக்கவில்லை.

இந்நிலையில் விசாரணையை நீதிபதி வெள்ளிக் கிழமை வரை ஒத்திவைத்தார்.

## தேவை

பூப் போடவும் றெடிமேட் ஆடைகள் தைப்பதிலும் அனுபவம், திறமை வாய்ந்த பெண்கள் தேவை. நேரில் வரவும். முடிவு திகதி 18-8-67. நேரம்: 8-00 — 12-00. முகவரி ''சுகல்'' இன்டஸ்றீஸ், 47. பீச் றோட், யாழ்ப்பாணம். 2489

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஆகஸ்ட் மாதம்12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org